பக்கங்கள் 19 + 3

# மாலை முரசு

## முன்னாள் ஜனாதிபதிகள் உட்பட 30 முன்னாள் எம்.பிக்கள் 'குட்பாய்'



ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த உறுப்பினர்களில் சுமார் 30 பேர் வரை நாடாளுமன்ற அரசியலுக்கு விடை கொடுத்துள் 02

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 20 ஞாயிற்றுக்கிழமை 06.10.2024 | அதிர்வு 66

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழரசின் யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியல் இறுதி

- அம்பாறையில் தனித்துப் போட்டி
- திருமலையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து வீட்டுச் சின்னத்தில் போட்டி

(கி.வசந்தன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன் விபரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டுள்ளார். 02



## முட்டையின் விலை மீண்டும் அதிகரிப்பு

தற்போது நாட்டின் பல இடங்களில் முட்டைகளின் சில்லறை விலை 40 ரூபாவாகவும், சில பகுதிகளில், 45 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால், இரண்டு நாட்களுக்கு முன், முட்டையின் விலை 30 02



## உருளைக்கிழங்குக்கும் பெரிய வெங்காயத்துக்கும் இறக்குமதி வரி உயர்வு

உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்துக்கான விசேட இறக்குமதி வரியை அதிகரிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ உருளைக் கிழங்குக்கான இறக்குமதி வரி 10 ரூபாவினாலும், ஒரு கிலோ 02

## இலங்கை குறித்த தீர்மானத்தை கால நீடிப்பு செய்வதற்கு ஆதரவளிக்க வேண்டும்

**அநுர அரசிடம் 25 சிவில் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்து**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் கால நீடிப்பு செய்வதற்கு ஆதரவளித்தல் உள்ளடங்கலாக ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளுக்கு அமைவாக நாட்டில் கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் புதிய அரசு முன்னெடுக்க வேண்டும் 02






## முதலையால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் உயிரிழப்பு!

முதலை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அனுராதபுரம் – கெமுனுபுர பிரதேசத்தில் மொர ஓயாவைக் கடந்து சென்ற 60 வயதுடைய குடும்பஸ்தரே முதலை தாக்கி உயிரிழந்துள்ளார். 02

## தமிழரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா விருந்தினர் விடுதியொன்றில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வேட்பாளர் தெரிவுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே வேட்பாளர் பட்டியல் விபரத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

இதன்போது சுமந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனக் குழுவின் கூட்டம் இன்று காலை முதல் மாலை வரை இரண்டாவது நாளாக நடைபெற்றது. இதில் ஒவ்வொரு மாவட்டங்களின் வேட்பாளர்கள் நியமனம் தொடர்பாக ஆராய்ந்து இறுதி முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

அதன்படி யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறீதரனும் மற்றும் நானும் போட்டியிடுவதுடன், ஏனைய 7 பேரும் புதியவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.சி.சி.இளங்கோவன், சட்டத்தரணி கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இமானுவேல் ஆர்னோல்ட், கிருஸ்ணவேணி சிறீதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் பெண் வேட்பாளர்கள். மிகவும் துடிப்பான இரு பெண்களையும் இம்முறை நிறுத்தியுள்ளோம்.

பெண் வேட்பாளர்கள் தேவை என நாம் ஊடகங்களில் தெரிவித்ததைப் பார்த்து இருவர் காலை விண்ணப்பித்தனர். அவர்கள் இருவருக்குமே வாய்ப்பைக் கொடுத்துள்ளோம்.

அத்துடன், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்திலும் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், எமது கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன், மட்டக்களப்பு மாநகர முன்னாள் மேயர் தி.சரவணபவன், வைத்தியர் சிறிநாத் உள்ளிட்ட நால்வர் இறுதி செய்யப்பட்டுள்ளனர். ஏனைய இருவரும் மாவட்டக் கிளையுடன் கதைத்து இறுதி செய்யப்படும்.

வன்னி, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட பட்டியல் இறுதி செய்யப்படவில்லை. வன்னித் தேர்தல் தொகுதியில் மூன்று மாவட்டங்கள் இருப்பதுடன் பல்வேறு பிரிவினரும் உள்ளனர். அது தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்ற நிலையில் எதிர்வரும் புதன்கிழமை இறுதி செய்யப்படும்.

திருகோணமலையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து எமது வீட்டு சின்னத்தில் போட்டியிடுகின்றோம். அவர்களுக்காக 3 ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதுவும் எதிர்வரும் புதன்கிழமை இறுதி செய்யப்படும். அம்பாறை மாவட்டத்தில் எமது மாவட்டக் கிளை கலந்துரையாடி எடுத்த தீர்மானத்துக்கு அமைவாக எமது சின்னத்தில் நாம் தனித்துப் போட்டியிடுகின்றோம். எமது மாவட்டக் கிளை வேட்பாளர்களைத் தற்போது தெரிவு செய்து வருகின்றது. எதிர்வரும் புதன்கிழமை இறுதி செய் யப்படும்.

இம்முறை மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்துக்கேற்ப புது முகங்களுடன், இளையவர்களுடன் எமது கட்சி தேர்தலில் களமிறங்கியுள்ளது.” – என்றார்.

## முதலையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொர ஓயாவுக்கு அருகில் ரஞ்சித் மங்கட என்கின்ற பகுதியில் மூன்று பேர் ஒன்றாக அமர்ந்து மது அருந்தியுள்ளனர்.

அவர்களில் ஒருவர் இறைச்சி எடுத்துக் கொண்டு வருதற்காக தனது வீட்டுக்குச் செல்ல மீண்டும் மொர ஓயாவைக் கடக்கும்போது முதலையால் தாக்கப்பட்டார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஸ்ரீபுர பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## முட்டையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவுக்கும் குறைவாக இருந்துள்ளது.

முட்டை உற்பத்தி குறைந்துள்ள காரணத்தால் முட்டையின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய நிலவரத்தின் அடிப்படையில் முட்டையின் விலை அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

## உருளைக்கிழங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி 20 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உருளைக்கிழங்கு இறக்குமதி வரி 50 ரூபாவில் இருந்து 60 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி 10 ரூபாவில் இருந்து 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர்களான மஹிந்த யாப்பா அபேவர்தன, சமல் ராஜபக்ஷ ஆகியோர் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதிருக்கத் தீர்மானித்துள்ளனர்.

பந்துல குணவர்தன, காமினி லொக்குகே, எஸ்.வினோநோதராத லிங்கம், சி.வி. விக்னேஸ்வரன், சிசிர ஜயக்கொடி, விஜயதாஸ ராஜபக்ஷ, ஜோன் செனவிரத்ன, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டவர்களும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதிருக்க முடிவெடுத்துள்ளனர்.

தேசியப் பட்டியல் ஊடாக சபைக்கு வந்த திஸ்ஸ விதாரண, ஜீ.எஸ்.பீரிஸ், தம்மிக்க பெரேரா, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அலி சப்ரி உள்ளிட்டவர்களும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை.

இவ்வாறு முன்னாள் எம்.பிக்கள் 30 பேர் வரை நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கவில்லை எனத் தெரியவருகின்றது.

## கால நீடிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என 25 சிவில் சமூக அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இது குறித்து சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், சட்டம் மற்றும் சமூக நிதியம், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு, இனக்கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் உள்ளிட்ட 25 அமைப்புக்கள் ஒன்றிணைந்து வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

“நாட்டில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மற்றும் புதிய அரசின் நியமனத்தை இலங்கையின் அரசியல் மாற்றத்தின் மிகமுக்கிய மைல்கல்லாகக் கருதுகின்றோம். தேர்தலும், ஆட்சி மாற்றமும் அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றமை குறித்து மகிழ்ச்சியடைகின்றோம்.

நாடு இப்போது நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தயாராகி வருகின்றது. நாட்டை ஜனநாயகப் பாதையில் கொண்டு செல்வதாகவும், ஊழலை இல்லாதொழிப்பதாகவும், தனக்கு வாக்களிக்காதோர் உள்ளடங்கலாக நாட்டின் பிரஜைகள் சகலருக்கும் ஜனாதிபதியாகச் செயற்படுவதாகவும் அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுயளித்திருந்தார். அதுமாத்திரமன்றி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் ‘அரகலய’ போராட்டத்தின் ஊடாக மக்களால் வலியுறுத்தப்பட்ட கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு தற்போது கிடைத்திருக்கின்றது. ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேலும் வலுப்படுத்துவதற்கும், பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகப்பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அரசு இந்த வாய்ப்பைப் பயன்படுத்தும் என்று நம்புகின்றோம்.

அதேவேளை,, அனைவருக்குமான நீதியை நிலைநாட்டுவதை முன்னிறுத்தி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து, அதிகாரப் பகிர்வை வழங்கக்கூடிய புதிய அரமைப்பை உருவாக்கல், சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல், சகல இனங்களுக்கு இடையிலும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பல், பொது ஒழுங்கைப் பேணுவதற்கும் பொலிஸ் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் இராணுவத்துக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் வெளியிடப்பட்டு வரும் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்தல், போர்க்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் கால நீடிப்பு செய்வதற்கு ஆதரவளித்தல் ஆகிய நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும்.” – என்று அந்தக் கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



## ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# நீதி நிலைநாட்டப்படும்!

### ஜனாதிபதி அநுர உறுதி





உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதோடு, மீண்டும் அவ்வாறானதொரு அழிவுக்கு நாட்டுக்குள் இடமளிக்காத வகையில், பாதிக்கப்பட்டவர்களுக்காக நீதியும் நியாயமும் நிலைநிலைநாட்டப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார்.

ஈஸ்டர் தாக்குதலில் காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை நீர்க்கொழும்பு, கட்டுவாபிட்டிய சென். செபஸ்தியன் தேவாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு உறுதியளித்தார்.

இன்று காலை கட்டுவாபிட்டிய தேவாலயத்துக்குச் சென்றிருந்த ஜனாதிபதி, ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபிக்கும் மலர் அஞ்சலி செலுத்தினார்.

ஜனாதிபதியின் வருகையை நினைவூட்டும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்றும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

பின்னர் ஈஸ்டர் தாக்குலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருடன் ஜனாதிபதி கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் இதன்போது நேரடியாக ஜனாதிபதியிடம் அவர்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

இந்நாட்டில் அண்மைய காலத்தின் மிக மோசமான அழிவு 2019 ஏப்ரல் 21 ஆம் திகதியே நிகழ்ந்தது என்றும், அந்த விடயங்கள் மண்ணுக்குள் புதையுண்டு அழிவதற்குத் தான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தனக்கு வாக்களித்ததன் பின்னணியில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான நீதியும் நியாயமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருந்ததென நம்புவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் நோக்கங்களும், எதிர்பார்ப்புக்களும் தான் கொண்டிருக்கும் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களுக்கு மாறுபட்டவை அல்ல என்றும், ஈஸ்டர் தாக்குதல் குறித்து மக்கள் எதிர்பார்க்கும் நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படும் என்பதுடன், அதற்கான முன்னெடுப்புக்கள் தற்

தொடர்ச்சி ▼





# நீதி நிலைநாட்டப்படும்!

தொடர்ச்சி▲

போதும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான முழுமையான முடிவொன்றுக்கு வந்து, அந்த முடிவை அடிப்படையாகக் கொண்டு சாட்சிகளைத் திரட்டுவதுவதால் மாத்திரம் இந்த விசாரணைகளை கொண்டு நடத்த முடியாது என்றும், வெளிப்படைத் தன்மையுடன் இந்த விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியல் மாற்றத்துக்காக இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் இருப்பதாகவும், அரசியலுக்காக நூற்றுக்கணக்கில் அப்பாவி உயிர்களைப் பலியிடுவது பாரிய அழிவாகும் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அவ்வாறான நிலைப்பாடு நாட்டின் அரசியலுக்குள் காணப்படுமாயின் அந்த நிலைமையை முழுமையாக துடைத்தெறிய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இரண்டாவது விடயமாக அப்போதைய ஆட்சிப் பொறிமுறையும் இதனுடன் தொடர்புபட்டிருந்ததா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் நிலவுகின்றது என்றும், அவ்வாறான நிலை மிகவும் பாதுகாப்பற்றதும் ஆபத்தானதுமான நிலை என்பதோடு, அதன்படி இதற்குள் நடந்தது என்னவென்பதை கண்டறிய வேண்டியது மிக அவசியமானது என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அடுத்தபடியாக, 274 இற்கும் மேற்பட்டவர்களின் உயிர்களைப் பறித்த மற்றும் பெருமளவானவர்களைக் காயத்துக்கு உள்ளாக்கிய அழிவினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது அன்புக்குரியவர்கள் மீது கொண்டிருக்கும் அன்புக்கான நீதியை நிலைநாட்ட வேண்டியது அவசியமாகும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதேபோல் இவ்வாறான பிரச்சினையினால் ஏற்படக்கூடிய மிகப்பெரிய பாதிப்பிலிருந்து சமூகத்தை பாதுகாத்தமைக்காக மதகுருமார்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றி கூறுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சமூகத்துக்குள் காணப்பட்ட இணைவு, ஒருமைப்பாடு, நம்பிக்கை சிதைந்து போயிருப்பதாகவும், மற்றுமொரு சமூகத்தின் மீது குரோதத்துடன் பார்க்கும் நிலை உருவாவது சமூக நல்வாழ்விற்கு மிகப்பெரிய ஆபத்து என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதனால் ஈஸ்டர் தாக்குதல் குறித்து நியாயமான விசாரணையொன்றை நடத்த வேண்டியது அவசியமாகும் என்பதையும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்துபோன 5 வருடங்களில் ஒவ்வொரு ஏப்ரல் 21 ஆம் திகதியும் வீதிகளிளிலும் சந்திகளிலும் ஒன்றுகூடிய மக்கள் அவர்களின் மனதிலிருந்த நீதி தொடர்பிலான எதிர்பார்ப்புக்களையே வெளிப்படுத்தினர் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இங்கு கருத்துதி தெரிவித்த கொழும்பு பேராயர் கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்த போதும் அதற்கான நியாயம் கிடைக்கவில்லை என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசுகளால் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டாலும் பிரச்சினைக் குக் காரணம் என்னவென்ற கேள்வி மக்கள் மத்தியில் உள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீது நம்பிக்கை உள்ளது என்றும், அவரின் நேர்மையைப் பாராட்டுவதாகவும் தெரிவித்த கர்தினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, அந்த நேர்மையை மக்கள் மத்தியில் வலுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயற்படுவார் என்று நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அதன்படி ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவார் என்ற நம்பிக்கையும் கொண்டிருப்பதாகவும் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கட்டுவாப்பிட்டிய தேவாலய பொறுப்பாளர் அருட்தந்தை மஞ்சுள நிரோஷன் மற்றும் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களும் பெருமளவில் கலந்துகொண்டிருந்தனர்.





# தென்னிலங்கை போல் அரசியல் புரட்சியை வடக்கு தமிழ் மக்களும் விரும்புகின்றார்கள்

## வன்னியில் தனித்துக் களமிறங்கும் சிறி ரெலோ கட்சி தெரிவிப்பு

(கி.வசந்தன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் தொகுதியில் சிறி ரெலோ கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளது என்று அக் கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அரசியலில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்கள். அத்தகையதொரு அரசியல் புரட்சியை வடக்கு தமிழ் மக்களும் விரும்புகின்றார்கள்.



கடந்த காலங்களில் தாம் தெரிவு செய்த உறுப்பினர்களால் ஏமாந்த நிலையில் அவர்களைப் புறக்கணித்து புதிய துடிப்புள்ளவர்களை இம்முறை நாடாளுமன்றம் அனுப்புவதற்குத் தமிழ் மக்களும் தயாராகி வருகின்றார்கள்.

அம் மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் துடிப்புள்ள இளம் மற்றும் திறைமை வாய்ந்த வேட்பாளர்களுடன் சிறி ரெலோ கட்சி ஜனநாயகத் தேசியக் கூட்டணி கட்சியின் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடுகின்றது.

அதற்கு உங்களது ஆதரவையும் வாக்கையும் வழங்கி வன்னியை மாற்ற ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.



# யாழில் உண்ணிக்காய்ச்சலால் இளம் யுவதி ஒருவர் உயிரிழப்பு

உண்ணிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இளம் யுவதி ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த சத்தியசீலன் சானுஜா என்ற 19 வயது இளம் யுவதியே உயிரிழந்தவராவார்.

மேற்படி யுவதி காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவர் உண்ணிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டு 10 நாட்களாகத் தொடர் சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.




# அம்புலன்ஸ் மோதி பாதசாரி உயிரிழப்பு!

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அம்புலன்ஸ் வாகனம் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி மீது மோதியதில் மேற்படி நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு – கண்டி பிரதான வீதியில் மொலகொட பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று கேகாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தின்போது படுகாயமடைந்த பாதசாரி கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் கேகாலை பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

அம்புலன்ஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள கேகாலை பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மாற்றம் தேடும் வாக்காளர்கள்

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் முழு நாடுமே தான் ஒரு மாற்றத்தை தேடுகின்றது என்பதை வெளிப்படையாக எடுத்துரைத்திருக்கின்றது. அதுவும் இளம் வாக்காளர்கள் காலம் காலமாக இந்த நாட்டில் அரசியல் கொத்தடிமைக் கலாச்சாரத்தை கொண்டு சென்ற அரசியல் முதலாளிகளை அடியோடு தாங்கள் மறுக்கின்றார்கள், வெறுக்கின்றார்கள் என்பதை கோடிக்காட்டி இருக்கின்றார்கள்.

மாற்றத்தை விரும்பும் இளம் வாக்காளர்களின் ஆக்ரோஷமான கருத்தைப் புரிந்து கொண்டு தெற்கில் மூத்த - பழைய - அரசியல்வாதிகள் பலர் மெல்ல ஜாகா வாங்கத் தலைப்பட்டுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் அரசியலில் இருந்து விலக தீர்மானித்துள்ளனர்.

அந்த வகையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தாம் அரசியலில் இருந்து விலகுகின்றனர் எனவும், இந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவது இல்லை எனவும் தீர்மானித்து அறிவித்து வருகின்றனர்.

அவர்களில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் முன்னாள் நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோரும் அடங்குவர்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 17.27 வீத வாக்குகளை பெற்றிருந்தும் கூடத் தான் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என அறிவித்துள்ளார்.

மேலும், காமினி லொக்குகே, ஜோன் செனவிரத்ன, மைத்திரிபால சிறிசேன, பந்துல குணவர்தன, மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர் எனவும் கூறப் படுகின்றது.

மேலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போன்ற பாரம்பரிய கட்சிகள் அதிகளவான இளம் தலைவர்களுக்கு வாய்ப்பு வழங்கத் தீர்மானித்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, முன்னாள் ராஜாங்க அமைச்சர்களான பிரமித பண்டார தென்னக்கோன் மற்றும் செஹான் சேமசிங்க ஆகியோரும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என தீர்மானித்துள்ளனர் என்று கூறப்பட்டது.

வடக்குக் கிழக்கிலும் - தமிழர் தாயகத்திலும் - 'பழசுகளை விரட்டும்' ஒரு மன நிலை வாக்காளர்கள் மனதில் முகிழ்ந்துள்ளமை வெளிப்படையாகத் தோற்றுகின்றது.

ஆனால், பழைய பத்தாம் பசலி அரசியல்வாதிகளுக்கு அது புரிவதாகத் தெரியவில்லை.

களத்தில் இறங்கி வாங்கிக் கட்டும் போது அது அவர்களுக்குப் புரியும்.

# பருத்தித்துறையில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய 12 உணவகங்களுக்குத் தண்டம்!

யாழ். பருத்தித்துறை நகர் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய 12 உணவு கையாளும் நிலையங்களுக்கு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் நகர் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்போது சுகாதாரச் சீர்கேடுகளுடனும் மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வகையிலும் இயங்கிய 12 உணவு கையாளும் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, உரிமையாளர்கள் தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதையடுத்து அவர்களை எச்சரித்த மன்று, அவர்களுக்கு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.



# மாணாக்க உழவர் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன



மாணாக்க உழவர் - 2024 வீட்டுத் தோட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் மாணவர்களிடையே நடத்தி வரும் மாணாக்க உழவர் வீட்டுத் தோட்டப் போட்டி இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது.

அதற்கான விண்ணப்பங்கள் இப்போது கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மாணாக்க உழவர் என்னும் வீட்டுத் தோட்டப் போட்டியை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, நஞ்சற்ற உணவுற்பத்தி, மாணவர்களை மன அழுத்தங்களில் இருந்து விடுவித்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு இந்தப் போட்டி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போட்டியின் இந்த ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஏற்கனவே வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டுள்ள மாணவர்களும், புதிதாக ஈடுபட விரும்பும் மாணவர்களும் இந்த ஆண்டுக்கு உரிய மாணாக்க உழவர் போட்டியில் கலந்துகொள்ள முடியும்.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் யாழ்ப்பாணம், அரசடிவீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தையும் இலவசமாக விதைகளையும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ்களும் சிறப்பாக வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்பவர்களுக்குச் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# நற்பிட்டிமுனை நூலகத்தில் சிறுவர் பிரிவு திறந்துவைப்பு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை, கரைவாகு மேற்கு நற்பிட்டிமுனை பொது நூலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பிரிவு வியாழக்கிழமை (03) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நூலகர் எஸ்.எம்.ஆர். அமினுதீன் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் பிரதம அதிதியாகவும் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறுவர்களின் கலை கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் அவர்களுக்கு பரிசுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் இந்த நூலகத்தின் துரித அபிவிருத்திக்கு கல்முனை மாநகர ஆணையாளர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்காக நூலக வாசகர் வட்டத்தால் இதன்போது நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நற்பிட்டிமுனை பொது நூலக வாசகர் வட்டத்தின் தலைவரும் முன்னாள் கல்முனை பிரதேச சபை உறுப்பினருமான ஏ. அப்துல் கபூர் செயலாளரும் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகருமான எஸ். சிராஜ்தீன் உட்பட வாசகர் வட்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட அனைத்து பொது நூலகங்களிலும் சிறுவர்களுக்கென பிரத்தியேகமான



பிரிவுகளை அமைக்குமாறு கல்முனை மாநகர ஆணையாளர் நௌபீஸ் வழங்கிய அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைவாக இந்தச் சிறுவர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# மாணவனை நல்ல மனிதனாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உரியது!

**இன்று ஆசிரியர் தினம்.**

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முகவரியில்லாத கடிதத்துக்குச் சமம். இது போல் தான் மாணவ சமூகமும் குறிக்கோள், இலட்சியம் இல்லாமல் இருந்தால் எதிர் காலம் ஓர் இருண்ட பாதை என்பதை ஆரம்ப காலத்தில் இருந்தே மாணவ மனதில் நன்கு பதிய வைத்து, அதன் மூலம் கிடைக்கும் வெற்றியை பார்க்கும் பொழுது ஆசிரியர்களின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றும்.

இதனை சொல்வதை விட உணர்வுப் பூர்வமாக உணர முடியும். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாண வனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதேபோல் ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்ல. மாறாக உயிரூட்டுபவர்கள். ஒரு சிறந்த ஆசிரியர்களின் பண்புகள், குணங்களை பார்க்கும் மாணவ, மாண விகளின் மனதில் அப்படியே பதியும்.

பாடசாலை மாணவர்கள் கற்பதாக இருந்தால் அவர்கள் கையில் ஒரு அழகான மிகப் பெறுமதி வாய்ந்த கையடக்கத்தொலைபேசி காணப்படவேண்டும் பெறுமதியான கையடக்கத்தொலைபேசி காணப்பட்டா லும் இணைய வழியில் இணையத்தினூடாக கற்பதற்கு இணையத்துக்குப் பணம் செலவிடப்பட வேண்டிய தேவை இன்று உள்ளது.

இலவசக் கல்விக்கு முன்னுதாரணமாகத் திகழும் இலங்கையில் இன்று இக்கட்டான நிலை காணப்படுவது அனைவருக்கும் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும். பல மில்லியன் ரூபா பல கோடிக்கணக்கான அதிவேக வீதிகளையும், அபிவிருத்தி என்ற போர் வையில் ஆங்காங்கே அபிவிருத்தி பணிகள் இடம் பெறுவதாக காட்டப்படுகின்ற தரவுகளும் இருக்கின்ற போதிலும் இன்று இலவசக் கல்வி என்கின்ற ஒரு போர்வையில் மாணவர்கள் இலவசக் கல்வியை தொடர முடியாத வண்ணம் காணப்படுகின்றனர்.

இலவசக் கல்வி என்கின்ற போர்வையில் அனைத்துமே இன்று பணம் வசதி படைத்தவர்கள் மட்டுமே கல்வியை தொடரக் கூடிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. ஒருவரது குடும்பத்தில் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் கல்வி கற்கவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படுகின்ற போது, அங்கு கல்வி கற்பதற்கான போதியளவு வசதி வாய்ப்புகள் காணப்படுவதில்லை. அவர்களுக்குத் தேவையான நவீன தொடர்பு சாதனங்களும் அங்கு பற்றாக்குறையாக காணப்படுகின்றது.



வி. டெலக்சினி,
அக்கரைப்பற்று.

இனி மாணவர்களுக்கு இலவச இணை யத் தள வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்ப தற்காக குறிப்பிட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரசு எதிர்காலத்தில் இலவச இணையத்தளங்களின் ஊடாக கல்வியை கற்பதற்கு இலவச இணைய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் மிக வும் காலத்தின் கட்டாயமானது ஒன்றாகும்

எது எப்படி இருப்பினும் மாணவர்களுக்கு கல்வியில் வீழ்ச்சி இருப்பது இங்கே நாம் சுட்டிக் காட்டத்தக்கதாகக் காணப்படுகிறது.

மனித வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத, மனித சமூகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற 'ஆசிரியரை' கௌரவப்படுத்தும் நோக்கில் பல்வேறு சமய கலாசார மற்றும் நிறுவன நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன. இவை மனித நாகரிகத்தின் வளர்ச்சி படிகள் எனின் மிகையல்ல.

ஒக்டோபர் 06 உலக ஆசிரியர் தினம் உலகளாவிய ரீதியில் பல்வேறு விதமாகக் கொண்டாடப்படுகின்றது. யுனெஸ்கோ நிறுவனம் ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக, 'ஆசிரியரின் தன்மையைக் கருத்தில் கொண்டு அங்கீகாரமளித்தல் என்ற கூற்றுடன், பொதுக் கல்விக்காக அல்லது சிறப்புத் துறை யொன்றுக்காக அவர்களால் ஆற்றப்பட்டுவரும் பங்க ளிப்பை மரியாதை செய்யும் முகமாக, இவ் உலக ஆசிரியர் தினத்தை அறிவித்து, வருடாந்தம் கொண் டாடப்பட்டும் வருகின்றது.

கடந்த காலங்களைப் போல் அல்லாது கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டு வருகின்ற இக்கட்டான காலகட்டத்தில் கொரோனாவின் தாக்கத்தின் காரணமாக இலங்கை போன்ற வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் கல்வியானது மிக முக்கிய அம்சமாக காணப்படுகின்றது. இது எதிர்காலத்தில் மிகப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று ஆசிரியர்களின் அபரிமிதமான கற்பித்தல் நுட்பங்கள் பாராட்டத்தக்கது. ஒவ்வொரு மாணவர்களும் ஒருவிதம் அவர்கள் அனைவரையும் தனது கட்டுப் பாட்டில் கொண்டுவந்து இணையத்தின் வாயிலாக கற்பிக்க நடவடிக்கை எடுப்பது என்பது சாதாரண விடயமல்ல. ஒருமணிநேர இணைய வகுப்புக்காக ஆசிரியர்கள் தங்களை மூன்று முதல் நான்கு

தொடர்ச்சி ▼




# மாணவனை நல்ல மனிதனாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு உரியது!

**தொடர்ச்சி▲**

மணிநேரங்கள் தயார்படுத்த வேண்டி இருக்கின்றது. காரணம் மாணவர்களுக்கு இலகுவாக விளங்கப்படுத்த இவர்கள் அதனை கணிணியில் தட்டச்சு செய்து பின்னர் மெய் நிகர் கல்விக் கூடத்தில் தரவேற்றி கற்பிக்க வேண்டும்.

இன்றைய ஆசிரியர் தினத்தில் இவர்களை போற்றிப் பாரட்ட வேண்டும். யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கில் கல்வி கற்ற மாணவர்களும் சரி ஆசிரியர்களும் சரி அப்போது கல்விக்கான ஒரு பொறிமுறையைக் கையாண்டனர். ஆனால் கடந்த உலக கொரோன யுத்தத்தில் இவர்கள் பயன்படுத்திய உத்திகள் ஒரு பொற்கால கற்பித்தல் என்றே கூறலாம்.

எதிர்கால இளைஞர் சமுதாயத்தின் நலன் கருதி குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியை கல்வியில் நாங்கள் எதிர்பார்க்க வேண்டுமாக இருந்தால் உடனடியாக இலவச இணையத்தளங்களின் வாயிலாக அதிகரித்த கல்விச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் கல்வியானது எந்த அளவு சாத்தியம் என்ற ஒரு கேள்வியும் எழுந்துள்ளது. பொருளாதார ரீதியில் பலமான மாணவர்கள் கல்வி கற்கக் கூடிய நிலையும் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் காணப்படுகிற மாணவர்கள் அங்கே கையடக்கத் தொலைபேசிகள் இல்லாத நிலையில் இந்த நவீன தொழில் நுட்பத்தால் இனையவசதிகளுக்கு அதிகளவு பணத்தைச் செல வழிக்கும் நிலையில் மாணவர்களுக்குக் கல்வியில் புரட்சியை ஏற்படுத்தி இருக்கின்றது.

அனைவரும் இன்றைய நவீன காலத்தில் நவீன கையடக்க தொலைபேசி ஊடாக கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொண்டு வருகின்ற போதிலும் ஆங்காங்கே இணையதளத்துக்கு ஏற்படுகின்ற கட்டுப்பாடுகளும் தொடர்ச்சியாக காணப்படுகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதிர்காலக் கல்வியின் நலனை கருத்தில் கொண்டு உடனடியாக இலவச இணையதள வசதிகளை பாடசாலை சமூகத்திற்கு வழங்குவதுடன் குறிப்பாக பிரம்மாண்டமான கையடக்கத் தொலைபேசி வலையமைப்புக்கள் பல ஒழுங்குபடுத்தல்களை செய்திருக்கின்றனர்.

குறிப்பாக மாணவர்கள் இணையத்தின் வாயிலாக திசை திருப்பப்படாத வண்ணம் மெய்நிகர் கற்கை நெறிக்காக மட்டுமே சில ஒழுங்கமைப்பு கட்டனம்களும் அறிமுகம் செய்யப்படுகின்றன. எனவே இதுபோன்ற பாதுகாப்பு அம்சங்களை கருத்தில் கொண்டு மாணவர்கள் மீது கல்வியின் பால் அக்கறை செலுத்தி அவர்களுக்கும் கட்டுப்பாடுகள் உடனான வசதிகளை வழங்கி அவர்கள் கல்வியை மட்டுமே அந்த கையடக்க தொலைபேசியில் இருந்து இணைந்து கொண்டு குறிப்பிட்ட பாடங்களில் படிப்பதற்கான வசதி வாய்பபை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாக காணப்படுகின்றது

குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது ஆசிரியர்கள் குழந்தைகளாகவே மாறிவிட வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தங்களின் முழுக்கவனத்தையும் ஆசிரியர்கள் மீது செலுத்துவார்கள். அப்படி குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது அவர்களின் மழலை பேச்சும், மழலைச் சிரிப்பையும் காணும் பொழுது புதிய உலகக்குச் சென்ற ஓர் உன்னத உணர்வு மனதில் ஏற்படும். அதேபோல் கிராமத்தில் இருக்கும் பள்ளிகளில் பணியாற்றுவதில் கிடைக்கும் மகிழ்ச்சி சற்று வித்தியாசமானது. அங்கு ஆரம்பப் கல்வி படிக்கும் மாணவன் பின் வாழ்வின் எத்தகைய உயர்ந்த நிலைக்குச் சென்றாலும் அப்பள்ளியையும் ஆசிரியர்களையும் மறப்பது இல்லை.





# தேசிய ரீதியில் பதக்கம் வென்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மகாஜன கல்லூரி மாணவர்கள் தேசிய மட்ட ரீதியில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி பதக்கங்களை வென்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவிகளையும் மாணவிகளுக்குப் பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (01) பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் என். சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாதனை படைத்த மாணவிகள், மாணவிகளின் பெற்றோர்கள் , பயிற்றுவிப்பு பொறுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பாடசாலை மானவிகளால் மலர் மாலை அணிவித்து ஊர்வலமாக பாடசாலை பிரதான மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு பாராட்டி வெற்றி பதக்கங்கள் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.லவக்குமார், பாடசாலை பிரதி அதிபர், பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர், பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.





# சாதாரண தர பரீட்சையில் சாதித்த மன்னார் மாணவர்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் கல்வி வலயத்தில் மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றாக மன் மடுக்கரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை காணப்படுகின்றது.

இந்தப் பாடசாலையில் தரம் 1 முதல் 10 வரையிலான வகுப்புகள் மாத்திரம் காணப்பட்டன. இதனால் சாதாரண தரம் மற்றும் உயர்தர வகுப்புக்களை தெரிவு செய்ய மாணவர்கள் அயல் பாடசாலைகளான நானாட்டான் மற்றும் முருங்கன் பாடசாலைகளுக்கு பஸ்ஸிலும், சைக்கிள்களிலும் சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று கல்வி கற்று வந்தனர்.

மடுக்கரை கிராமத்தைச் சூழ்ந்துள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு பெற்றோரின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் வலயக்கல்வி அலுவலகம் கடந்த 2019 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையை கா.பொ.த.சாதாரண தரம் வரை தரம் உயர்த்தி அதற்கான வளங்களையும் வழங்கியது.



இந்த நிலையில் 2023-2024 ஆம் ஆண்டுக்கான சாதாரண தர பரீட்சையில் இந்தப் பாடசாலையை சேர்ந்த 11 மாணவர்கள் தோற்றினர்.

இவர்களில் 07 மாணவர்கள் கா.பொ.த. உயர்தரத்துக்குத் தெரிவாகி உள்ளனர். ஒருவர் விஞ்ஞான பிரிவுக்கும் ,மேலும் ஒரு மாணவர் கணிதப் பிரிவுக்கும் தெரிவாகியுள்ளமை பாராட்டத்தக்கது.




# கருத்துக்கள் பொதிந்த கலைகளின் விழாவே நவராத்திரி... !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

ஒன்பது என்பது எண்களிலும் முக்கியமானது. ஜோதிடங்களிலும் முக்கியமானது. எண்கணித ஜோதிடத்திலும் இன்றியமையாததாய் இருக்கிறது. இந்த ஒன்பதை நவ என்னும் பெயரைக் கொடுத்து இராத்திரியுடன் இணைத்து நவராத்திரி என்றும் அழைக்கின்றோம். நவராத்திரி என்றாலே ஒன்பது இரவுகள் என் பதையும் எல்லோரும் அறிவோம். நவ என்றால் இன்னுமொரு கருத்தும் இருக்கிறது. அதாவது புதுமை என்பதையும் கருத்திருத்த வேண்டும். நவநா கரிகம் என்று புதிய அம்சங்களுடன் வந்தமைந்த நாகரித்தைப் பெயரிட்டு அழைக்கிறோம் என்பதையும் யாவரும் அறிவோம்.புதுமைகள் பல வாழ்வில் தொடர்ந்து வரவே ண்டும் என்னும் எண்ணத்தினால்தான் வருடந் தோறும் நவராத்திரியினைப் பக்தி பூர்வமாக அனுஷ்டித்து வருகிறோம் என்றும் எண்ணிடத் வைக்கிறதல்லவா.

நவராத்திரி என்றவுடன் பெண்மைதான் முன்னே வந்து நிற்கும். பெண்மை என்றதும் அங்கு தலைமை தாங்குவது தாய்மைதானே ! தாயினைத் தெய்வமாக வணங்கும் முறை தொன்று தொட்டு சமூகத்தில் இருந்து வருகிறது என்பதை வரலாற்றால் அறிந்து கொள் ளுகிறோம்.எம்மைப் படைத்த ஆண்டவனையே " அம்மையே " என்றுதான் அழைத்து ஆராதிக்கின்றோம். மணிவாசகப் பெருமானே " அம்மையே அப்பா ஒப்பி லாமணியே அன்பினில் விளைந்த ஆரமுதே " என்று தாயினையே முன்னிறுத்தி அந்தப் பரம்பொருளை விழிக்கின்றார். " தாயினும் நல்ல தலைவர் என்றடியார் " என்றும், " தாயும் நீயே தந்தையும் நீயே " என்றும். சம்பந்தப் பெருமானும் தாயினை முன்னிறுத்திப் பாடுவதும் நோக்கத்தக்கதே.தமிழ் மூதாட்டி ஔவையார் எத்தனையோ அறிவுரைகள் பகர்ந்தவர். அவர்கூட கொன்றை வேந்தனை ஆரம்பிக்கும் வேளை " அன்னையும் " என்றுதான் முதலடியாகக் கொண்டு ஆரம்பிக்கிறார்.

நாம் வாழும் பூமியைப் தாய் என்கின்றோம் . வாழ்வினுக்கு அவசியமான பொறுமையைத் தாய் என்கின்றோம். அனைவரின் அகத்திலும் அமரவேண் டிய கருணையையும் தாய் என்றுதான் சொல்லுகிறோம். ஓடு கின்ற ஆறுகளுக்கும் தாய்மையைக் கொண்ட பெண்களின் பெயர்களையே சூட்டி பெருமைப்படுத் துகிறோம் அல்லவா.

உலகிலே யாவராலும் மதிக்கப்படுவதும் , புனிதமாய் கருதப்படுவதும் என்ன வென்று பார்க்குமிடத்து அஃது தாய்மையாய்த்தான் மலர்ந்திருக்கிறது எனலாம். தாய்மைக்கு ஈடாக எதுவுமே இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனவேதான் தாய்மையை வழிபாட்டு நிலைக்கு எங்கள் முன்னோ ர்கள் உயர்த்தினார்கள் எனலாம். அந்தத் தாய்மையினை நவராத்திரியுடன் இணைத்து – ஒன்பது இரவுகளை யுமே தாய்த் தெய்வ வழிபாடாக எங்களின் முன்னோர்கள் அமைத்து விட்டார்கள். பெண்மை என்றாலே பெருஞ்சக்தி என்றுதான் போற்றப்படுகிறது. அந்த வகையில் பெருஞ்சக்தியாக உருவெடுக்கும் தெய்வத்து க்கு ஒப்பிட்டுத்தான் சக்தி வழிபாடு என்பதே தொடங்கி இருக்கலாம் என்று கருதமுடிகிறதல்லவா. அகிலத்தின் இயக்கத்துக்கு அந்தச்சக்தியே முதன்மையாய் இருக்கிறது அல்லவா. அப்படிப்பட்ட சக்தியானது இல் லாவிட்டால் இந்த அகிலத்தின் இயக்கமே அற்றுவிடும் அல்லவா? இந்த அடிப்படையில் சக்தியை மையமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதே பக்தி பூர்வமான நவராத்திரி விழாவாகும்.

சிவ என்றால் ஏகன் என்பதே அர்த்தமாகும். ஏகம் என்றால் ஒன்று என்றுதானே பொருள்.அதனால்தான் சிவனுக்கு உரிய ராத்திரியான சிவராத்திரியை ஒன்றாக்கினார்களோ தெரியவில்லை. நவ என்றால் ஒன் பது. நவசக்திகளைக் குறிக்க நவராத்திரியை ஏற்படுத்தியும் இருக்கலாம் அல்லவா ! சக்தி பெரிதா சிவன் பெரிதா என்று எடுத்து வீண் வாதம் மட்டும் செய்து விடவே கூடாது. சக்தி இல்லையேல் சிவம் இல்லை.சிவம் இல்லையேல் சக்தியும் இல்லையே என்றாகிவிடும். இரண்டுமே பிரிக்க முடியா நிலையாகும். இதனால்த் தான் " மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி – பின்னமிலான் எங்கள் பிரான் " என்று திருவருட்பயன் காட்டி நிற்கிறது.

வடக்கே காஷ்மீர் தொடக்கம் தெற்கே கன்யாகும ரிவரை , மேற்கே பாஞ்சாலத்திலிருந்து கிழக்கே பர்மா வரை , ஈழத்தில் பல பகுதிகளிலும் நவராத்திரி கொண் டாடப்படுகிறது. சைவர், வைணவர், சாக்தர், காணா பத்தியர், என்று எல்லா மதத்தவர்களுமே நவராத்திரியை அனுஷ்டிக்கிறார்கள் என்பதும் நோக்கத்தக்கதே யாகும். நவராத்திரி எப்பொழு ஆரம்பிக்கப்பட்டது என்று பார்க்கும் பொழுது – பாரத காலம், இராமாயண காலம் என்று நீண்ட காலமாகவே நவராத்திரி கைக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது என்றுதான் அறிய முடிகிறது.

தொடர்ச்சி▼

# கருத்துக்கள் பொதிந்த கலைகளின் விழாவே நவராத்திரி... !

தொடர்ச்சி▲

நவராத்திரி என்பது சக்தியை மையப்படுத்திய பூஜையாக இருப்பதால் – இதனைப் பல பெயரில் அழைத்து அனுஷ்டித்து வருவதும் நோக்கத்தக்கது. அம்பாள் எனக் காஷ்மீரிலும், பவானி என ராஜஸ் தானிலும், கல் யாணி என கூர்ஜரத்திலும், உமையென்று மிதிலைப்பகுதியிலும், அழைத்துப் போற்றிப் பரவுகின்றனர். இதனை விடவும் – மீனாட்சி, காமாட்சி, சாமுண்டி, சரஸ்வதி, துர்க்கை, பகவதி என்றும் பெயரிட்டு சக்தியை போற்றி வருவதையும் காணக்கூடியதாகவும் இருக்கிறது.

சக்தியினைப் பரவி நிற்கும் நவராத்திரி என்பது ஒன்றல்ல. நவராத்திரி என்பது வருஷத்தில் நான்கு முறை வருகிறது. மஹா நவராத்திரி என்னும் பெயருடன் தையில் வருகிறது. வஸந்த நவராத்திரி என்பது பங் குனியில் வருகிறது, ஆனியில் வருவது ஆஷாட நவராத்திரியாய் அமைகிறது. புரட்டாசியில் வருவது சாரதா நவராத்திரி. இந்த சாரதா நவராத்திரியைத்தான் இந்தியா தொடக்கம் ஈழம்வரை சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள்.இந்தியாவின் வடபகுதியில் 'தசரா' என்னும் பெயருடன் கலைமகளின் விழா அமைகிறது. நாங்கள் நவராத்திரி விழாவாக எடுக்கின்றோம்.நவராத் திரியின் நிறைவினை விஜயதசமி என்று அழைக்கிறோம். விஜயதசமியையும் உள்ளடக்கியே வடக்கில் " தசரா" என்றார்களோ என்றும் கருதக் கூடியதாக இருக்கி றதல்லவா.

நவம் என்றால் ஒன்பது எண்ணிக்கை என்று பார்த்தோம். அது எண்ணிக்கை மட்டுமல்ல புத்துணர்ச்சி என்னும் கருத்தையும் தாங்கியே நிற்கிறது. கலைகளைப் போற்றி நின்று கொண்டாடும் வழிபாட்டு விழா வாக நவராத்திரி அமைகிறது எனலாம். கலைகளை முன்னிறுத்தி அனுஷ்டிக்கும் பொழுது அங்கு புத்துண ர்வு மேலிடுவது இயல்பான ஒன்றல்லவா ? இதனால் நவராத்திரி புத்துணர்வினை நல்கி புதுத்தெம்பு பெருகி வாழ்வில் மகிழ்வினை நல்கிட உதவும் விரதமாய் , கொண்டாட்டமாய் அமைகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

எங்களின் சமயம் எங்கள் வாழ்வுடன் இணைந்தே வருகிறது. ஆனபடியால்தான் வளர்ந்து கொண்டே வருகிறது. தளர்வுண்டு போகாதிருப்பதற்குக் காரணம் அதன் தொடர் நிலை என்றுதான் என்ண முடிகிறது. அப்படித் தொடர்வதற்குக் காரணம் – நாங்கள் சமயத்தை வாழ்வியல் ஆக்கிக் கொண்டதே முக்கிய நிலை எனலாம். கடவுளையே உறவு முறையில் அழைத்து கடவுளுக்கே குடும்பமும் வைத்து வாழ்வியயோடு இணைத்து நிற்கும் சமயத்தை உலகில் எங்குமே காணமுடியாது. அதனால் வாழ்வுக்கு வாழ்வியலுக்கு எவை எல்லாம் இன்றியமையாதனவோ அவற்றை யெல்லாம் இறையுடன் இணைத்து அவற்றுக்கு பெருமையும் பெறுமதி யும் காட்டி நிற்பதுதான் எங்கள் சமயத்தின் உன்னதம் எனலாம். கர்த்தர் , கருணாநிதி, பிதா , பிள்ளை, அண்ணல், அரும்பொருள், நாயகன், நடுநிலையாளன், மாண்புடையான், மெய்ப்பொருளான வன், தலைவன், தோழன்,என்றெல்லாம் அன்பு பாராட்டி அழைக்கின்றார் அந்தப் பரம்பொருளை. ஆனால் இவை எல்லா வற்றுக்கும் மேலாக தாய் என்று அழைப்பதே சிறப்புடையதாகும் என்று தவசிரேஷ்டர்கள் எண்ணுகிறார் கள்.

தாயிடத்துப் பிள்ளை உரிமையுடன் எதையுமே கேட்கும் நிலை இருக்கிறது. தாயான சக்தியிடம். வாழ்வி னில் செம்மையாக வாழ எவையெல்லாம் எமக்குத் தேவை என்பதைக் காட்டி நிற்பதுதற்கு நவராத்திரி எல்லோருக்கும் வரமாய் வாய்த்திருக்கிறது எனலாம்.

நல்ல நலம் வேண்டும். இவ்வுலகில் வாழுதற்கு நல்ல வளம் வேண்டும். நலமும் வளமும் வாய்த்து விடுவது மட்டும் முக்கியமல்ல. அத்துடன் தெளிவும் வரவேண்டும். நலமென்னும் என்னும் பொழுது வீரமாகிறது. வளம் என்னும் பொழுது செல்வம் ஆகிறது. தெளிவென்னும் பொழுது கல்வி வந்து அமைகிறது தெளிவைத் தரும் கல்வியையும், வளத்தைத் தரும் செல்வத்தையும், நலத்தைத் தரும் வீரத்தையும் தந்தருளவாய் தாயே என்று மனமுருக வேண்டிப் பிரார்த்தித்து நிற்பதுதான் நவராத்திரியாய் வந்து அமைகிறது. வீரத்துடனும் , செல்வத்துடனும் அறிவு அதாவது கல்வியானது இணைய வேண்டும். அப்படி இணைந்தால்த்தால் வீரமும் செல்வமும் ஒழுங்கான முறையில் பயனை அளிக்கும். அப்படி அமையும் பொழுது அங்கே வெற்றி என்னும் வெளிச்சம் பிரகாச மாய் வந்து நிற்கும். இதுதான் உண்மை. இதுதான் நிச்சயம். இதனை உணர்த்துவதாய் அமைவதுதான் நவராத்திரி. இந்த வெற்றியையே உணர்த்தி நிற்பதைத் தான் விஜயதசமி என்று கொண்டாடி மகிழ்கிறோம்.

சக்தியின் வடிவங்கள் பற்பல. எந்தத் தேவைக்கு என்ன சக்தி தேவையோ அந்தச் சக்தியாய் – தாயாய் விள ங்கும் ஆதிசக்தி வந்து நிற்பாள். நாட்டின் ஆட்சி அதிகாரத்தை நடத்தும் மந்திரிசபையில் பாதுகாப்பு, கல்வி, நிதி என்பதை நடத்துவதற் கென்று இருபது போல்– ஆதி சக்தியானவளும் உலக இயக்கத்துக்கு இன்றியமை யமையாதனவாகிய வீரம் , செல்வம், கல்விக்கும் பொறுப்பான சக்தியாய் வரு வதை நவராத் திரி விளக்கி நிற்கிறது எனலாம். துர்க்கை எனும் சக்தி வீரத்துக்கும், இலக்குமி எனும் சக்தி செல்வத்துக்கும், சரஸ்வதி எனும் சக்தி கல்விக்குமாய் அமைந்திருக்கிறது என்பது நோக்கத்தக்கதாகும்.

தாய்மை என்பதைப் பெண்மையில்தான் காணலாம். பெண்மை என்றால் மென்மை என்றும் பொருள் இருக்கிறது. அந்த மென்மைக்குள்ளே பொறுமையும் இருக்கிறது. மோலோங்கும் சினமும் இருக்கிறது. பெண்மை அடங்கி நிற்கும் பொழுது அங்கு மென்மை மேலோங்கும்.அதே பெண்மை பொங்கிடும் வேளை யாவுமே பொசுங்கிவிடும் வெம்மையே வெளிப்பட்டு நிற்கும். பெண்மையினை மென்மையாய்த்தான் அணு கவேண்டும். சக்திகளாய் அமைகின்ற – மலை மகளையும், அலைமகளையும், கலைமகளையும், அன்புடன் அணுகினால் வாழ்வினிலே நலமும் வரும், வளமும் வரும் , நல்ல தெளிவும் வரும்.

நல்நலமும் , நல்வளமும், நல்லறிவும் ,ஒன்றாக இணையும் பொழுதுதான் வாழ்க்கையென்பது பூரணமாகி றுது. இதில் ஒன்று குறைந்தாலும் அஃது நிறைவுடைய வாழ்வாக அமையவே மாட்டாது.இவை மூன்றையும் பெற்றிட மனம் மொழி மெய்களால் உருக வேண்டும். நம்மை மறந்து சலனமற்ற அந்தச் சக்தியிடம் சரணடைதல் வேண்டும்.கிடைத்த வளத்தை கீழாக்கு வதோ பாழாக் குவதோ பொருத்தமில்லா நிலையாகும்.

இறைவனைக் குறித்து உண்ணாமல் , உறங்காமல், உயிருக்கு வருகின்ற ஊறுகளைப் பாராமல், தவமியற்றி அதன் பயனாக வரத்தால் பல பெற்றிட்ட பலர் – கிடைத் தற்கரிய அத்தனையையும் , தங்களது ஆணவம் என் னும் அகந்தையினால் பொல்லாவழியில் செலுத்து –

தொடர்ச்சி▼

# கருத்துக்கள் பொதிந்த கலைகளின் விழாவே நவராத்திரி... !

தொடர்ச்சி▲

முடிவில் வரமும் போய் வாழ்வும் அழிந்ததை இதிகாசங்கள் , புராணங்கள் வாயிலாக அறிகின்றோம்.

சுத்தம் என்னும் பதத்தின் முன் அகரம் வந்தால் அது 'அசுத்தம' ஆகி விடுகிறது. சுரர் என்னும் பதத்தின் முன் அகரம் வரும்பொழுது 'அசுரர்' வந்துவிடுகிறார். சுத்தமாய் இருப்பவர் " சுரர் ". அசுத்தமாய் இருப் பவர் 'அசுரர்' என்றாகி விடுகிறதல்லவா. நவராத்திரி பற்றிய சிந்தனையில் இஃது அவசியாமா என்று எண்ணிடத் தோன்றுகிறதா ? இறைவனிடம் வரம்பல பெறுவதற்கு நீண்ட நாளகள், ஏன் வருடக்கணக்கில் தவமியற்றி பெறுதற்கு அரிய பேறுகளை எல்லாம் பெற்றதன் பின்னர் – அத்தனையையும் அறமில்லா வழி யில் செல்லவிட்டு , ஆணவத்தின் உச்சிக்கே சென்று , முடி வில் வரமும் இழந்து , வாழ்வும் முடிந்துபோன நிலை யினைப் புராணங்கள் இதிகாசங்கள் காட்டுகின்றன.

சிவ பக்தனானா இராவணன், சிவனிடம் வரம் பெற்ற பத்மாசூரன், சிவனிடம் வரம் பெற்ற சூரபதுமன், ஹம்சன், இரணியன், மகுடாசூரன் என்று இந்தவரிசை நீள்கிறது.வீரம் , செல்வம், கல்வி மூன்றும் வந்தாலும் – அங்கு அகந்தை மட்டும் வந்துவிடக்கூடாது. அறிவுடன் அதாவது நல்லறிவுடன் சேரும் வீரமும் , செல்வமுமே நிலைக்கும்.பயன் அளிக்கும்.பல்கியும் பெருகும். மாறாக நடப்பின் அத்தனையும் பயனற்றே போய்விடும் என்பதை மனமிருத்த வேண்டும்.அந்த அருமையான தத்துவத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் பக்திபூர்வமான நிலைதான் " நவராத்திரி" என்பதையும் அனைவருமே அகமிருத்துவது அவசியமாகும்.

நவராத்திரி என்பது விரதமா அல்லது கலைகளின் விழாவா என்று எண்ணும் பொழுது – விரதத்துடன் இணைந்த கலைவிழாவாகத்தான் நவராத்திரியைப் பார்க்கின்றோம். நவராத்திரி தொடங்கி விட்டாலே – ஆடலுக்கும் , பாடலுக்கும் குறைவே இருக்காது. கலைஞர்கள் அனைவரும் சங்கமிக்கும் விழாவாக நவரா த்திரி அமைவது அனைவருக்கும் பேரானந்த மாகும்.வீட்டிலும் பாட்டு.வெளியிலும் பாட்டு. கல்லூரிகள், கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில் பார்க்கும் இடங்கள், யாவற்றிலும் நவராத்திரி மிகவும் சிறப்பாகக் கலை விழாவாகவும், பக்தி பூர்வமான சமய நிகழ்வாக அமைவதைக் காணக்கூடியதாக இருக்கும். அதே வேளை அனைத்து ஆலயங்களிலுமே நவராத்திரி பக்திபூர்வமாய் நடைபெறுவதையும் காணலாம்.

நவராத்திரி என்றதும் மனமெல்லாம் ஒருவித பூரிப்பே ஏற்படும்.ஏனென்றால் கலைகளின் விழாவாக இருப் பதால்.இந்த விழாவில் கொலு வைப்பது என்பது வீட்டிலும் இருக்கும்.ஆலயங்களிலும் இடம் பெறும். கொலு என்றால் அழகு என்பதுதான் அர்த்தமாகும். கொலு என்பது ஆடம்பரத்துக்காக வைக்கப்படுவது அல்ல.கொலு வைப்பதிலும் அர்த்தங்கள் பொதிந்தே இருக்கின்றன என்பதையும் கருத்திருத்தல் அவசிய மேயாகும்.

கொலுவைப்பதிலும் சில நடைமுறைகள் வழக்கில் இருந்தே வருகின்றன. அதாவது ஒற்றைப் படையில் அமையுமாறுதான் கொலுவின் படிகளை அமைத்து வருகிறார்கள்.ஆனால் அவரவர் வசதிக்கு ஏற்பவும் கொலுவினை வைத்து வரு வதையும் காணமுடிகிறது. ஒன்பது படிகளாக வைப்பதை விஷேடம் என்று கருதும் நிலையே பரவலாகக் காணப்படுகிறது.

ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணாலாகிய பொம்மைகளால் என்னைப் பூஜித்தால் , நான் பூஜிப் போருக்கு சகல சுகங்களையும், சௌகரியங்களையும் அளிப்பேன் என்று தேவி பாகவதத்தில் – அம்பாள் கூற்றாக வருவது கொலு வைப்பதற்கு முன்னோடியாக அமைந்திருக்கலாம் அல்லவா.

கொலு மேடையில் கீழிருந்து முதற் படியிலே – ஓரறிவான , புல் , செடி போன்ற வற்றையும் , இரண்டாம் படி யில், ஈரறிவுடைய நத்தை, சங்கு போன்றவற்றையும், மூன்றாவது படியில், மூன்றறிவுடைய கறையான் , எறும்பு போன்றவற்றையும், நான்காம் படியில் நான்கறிவான நண்டு, வண்டு, போன்றவற்றின் பொம்மை களையும், ஐந்தாம்படியில் ஐந்தறிவான மிருகங்கள், பறவைகளின் பொம்மைகளை வைத்தல் வேண்டும். ஆறாவது படிதான் எங்களுக்கு உரியதாகும். சிந்திக்கும் அறிவுடைய நிலை மனிதர்களுக்கே இருப்பதால் இந்தப் படியில் மனிதர்களின் பலவகைப் பொம்மைகள் இடம் பெற்றிருக்கும்.ஏழாவது படியானது – மனிதனாய் இருந்தும் உயர்நிலையை எய்திய ரிஷி களுக்கு உரியதாய் அமைகிறது. அங்கு ரிஷிகளின் பொம் மைகள் வைக்கப்படும். மனிதருக்கும் ரிஷி களுக்கும் அப்பால் தேவர்கள் வருகிறார்கள்.எனவே எட்டாம் படியில் தேவர்கள் இடம் பெறுவார்கள். இதில் நவக்கிரகங்கள், அட்டதிக்கு பாலகர்கள், தேவைதை களின் பொம்மைகள் வைக்கப்படும்.ஒன்பதாம் படிதான் கடவுளருக்கு உரிய இடமாகும்.பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முப்பெருந் தெய்வங்களும், ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி ஆகிய முப்பெருந் தேவியரும், இடம் பெறு வர். நடுநாயகமாய் ஆதிபராசக்தியின் பொம்மை வீற்றிருக்கும்.

வெறும் பொம்மைகளைக் கொண்டதாக கொலு அமைந்து விட்டது என்று எண்ணிவிடக்கூடாது. மனிதன் என்பவன் தன்னுடைய ஆன்மீக சிந்தனைகளை வளர்த்துக் கொண்டே வருகிறான். அவனின் ஆன்மீகச் சிந்தனை பிரகாசிக்கும் நிலையில் முடிவில் இறைவனுடன் கலக்கவே வேண்டும்.அப்படியான ஒரு தத்து வார்த்தத்தை உணர்த்துவதாகவே நவராத் திரியில் வைக்கப்படும் கொலு காட்டி நிற்கிறது என்பது மனங் கொள்ளத்தக்கதாகும். .

இறை சக்தியால் நாமெல்லாம் இயங்குகிறோம். இறைசக்தியே எமக்கு இயக்க சக்தியாகும். அந்தச் சக் தியே அறிவை செல்வத்தை ஆற்றலை அளிக்கிறது. அந்த அளவிட முடியாத சக்தி அளித்த ஆற்றலை – அந் தச் சக்தியின் ஆசியுடன் வாழ்வில் கையாண்டால் " வாழ்க்கை வழமாகும். வாழ்க்கை வையத்துள் வசந்த மாக அமையும்." இப்படி வாழ்வியலோடு சக்தி இணைந்து அமைவது தான் நவராத்திரி விழாவின் கருப் பொருள் எனலாம்.

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே!
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே.

வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள், ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

# அம்மா இலக்குமி அணைப்பாய் தாயே !



நீள் செல்வம் நிலபுலங்கள் வேண்டாம்
மாடி மனை கோடிசெல்வம் வேண்டாம்
ஆழ் மனதில் அமைதிவர எனக்கு
அருள் தருவாய் இலக்குமித் தாயே!

வையத்துள் வறுமை இன்றி வாழ
மற்றவர்க்கு மனம் விரும்பி ஈய
பொய் இல்லா வழியினிலே உழைக்க
உய்யும் வழி காட்டிடுவாய் தாயே!

இல்லை என்று சொல்லாமல் இருந்து
இல் அறத்தை நல்லறமாய் ஆக்க
நல்ல பாதை காட்டிடுவாய் தாயே
நா நிலத்தில் துணையாவாய் நீயே!

அளவற்ற ஆசை எனக் கில்லை
அளவான பொருள் இருந்தால் போதும்
நிலையற்ற தங்கம் வைரம் வேண்டாம்
நினதருளே எனக் கிருந்தால் போதும்

செல்லும் செல்வம் வேண்டாம் தாயே!
செல்லா அருளைத் தந்திடு தாயே!
அல்லும் பகலும் உந்தன் நினைப்பே
அம்மா இலக்குமி அணைப்பாய் தாயே!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன்,
ஆஸ்திரேலியா.

# குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் மக்கள் காணிகளில் பிக்கு அடாத்து!

## ஜனாதிபதியை நடவடிக்கை எடுக்கக் கோரும் மக்கள்!!

(ஹஸ்பர்)

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள மக்களின் விவசாய நிலங்களை தொல்பொருள் நிலம் என்று பிக்கு ஒருவர் கூறி வருவதால் அந்தப் பகுதி மக்கள் பாரிய இடையூறுகளை சந்தித்து வருகின்றனர்.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியிலாவது இதற்கு உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



திருகோணமலை திரியாய்க் கிராமத்தின் பூர்விக வயல் நிலங்களில் முக்கிய வயல் வெளிகளான வளத்தாமரை, ஆதிக்காடு, ஒட்டுப்புல்மோட்டை, நீராவிக்கண்டல் மற்றும் வேடன்குளம் உள்ளடக்கிய வயல் வெளிகளில் மக்கள் பரம்பரை பரம்பரையாக செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் புல்மோட்டை அரிசிமலைப் பிக்கு ஒருவரால் அடாவடியாக 88 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இது பொது மக்களின் உறுதிக் காணி. இந்த நிலையில் விவசாயம் மேற்கொள்ள பாரிய சிரமத்தை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

வருடா வருடம் பெரும் போக வயற் செய்கையின் போதும் இவ்விதமான நெருக்கடிகளை மக்கள் எதிர்கொள்வதும் பின் பிக்குவின் அடாவடியால் மக்கள் ஒதுங்கிச் செல்வதும் வாடிக்கையாக இருந்து வருகிறது.

நீதிமன்றம் மக்களிடம் காணிகளை கையப்படுத்தக் கோரியும், பிக்கு அடாவடியான முறையில் இந்தச் செய்யற்பாட்டை முன்னெடுத்து வருகிறார் என்று விசனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.





# அக்கரைப்பற்றில் நடைபெற்றது பொதுத் தேர்தல் வட்டாரக் கூட்டம்

(றிஸ்வான் சாலிஹ்)

எதிர்வரும் நர்டாளுமன்றத் தேர்தலில் அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தி கட்சியை ஸ்திரப்படுத்தும் நோக்கில், அப்பகுதியில் உள்ள 17 வட்டார பிரதிநிதிகளது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை (04) இரவு கட்சியின் அக்கரைப்பற்று தேர்தல் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் போது, அக்கரைப்பற்று பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியை அதிகரிப்பது, இக்கட்சியின் கொள்கை மற்றும் எதிர்கால திட்டங்களை இப்பிராந்திய மக்களுக்கு எவ்வாறு தெளிவுபடுத்தல், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கரங்களை பலப்படுத்தி நாட்டில் ஸ்திரமான நிலையை உருவாக்க இப்பிரதேச மக்கள் எவ்வாறு பங்களிப்பு செய்ய வேண்டும், இப்பொதுத் தேர்தலில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் எவ்வாறான மாற்றங்களை மக்கள் மத்தியில் கொண்டு வர வேண்டும் போன்ற முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

வட்டார இணைப்பாளர்கள் தங்களது ஆக்க பூர்வமான கருத்துக்களை இதில் தரிவித்தனர் என்று இக்கட்சியின் அக்கரைப்பற்று செயற்பாட்டாளர் சிறாஜ் மஸ்சூர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, தேசிய மக்கள் சக்தியின் அக்கரைப்பற்று பிரதான செயற்பாட்டாளர் றமீஸ், சட்டத்தரணி றாஸி முஹம்மது ஜாபீர், ஆசிரியர் முஸ்னத் அஹமட் உட்பட வட்டார இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.



# சுத்தமான குடிதண்ணீர் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு!

(றிஸ்வான் சாலிஹூ)

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப் பற்று பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில், அதன் முகாமையாளர் ஐ.எல்.ஹைதர் அலியின் வழிகாட்டலில் "பாதுகாப்பான மற்றும் சுகாதாரத்துடன் கூடிய சுற்றுச் சூழலைக் கட்டியெழுப்புவதற்கும், கழிவு நீர் முகாமைத்து வத்துக்கு முடிந்தவரை பங்களிப்பு செய்து சுத்தமான நீர்வளமிக்க சுற்றுச் சூழலுக்கு நாம் எவ்வாறு பங்களிப்பை வழங்குவோம்" என்ற கருப்பொருளில் விழிப்புணர்வு மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபர் கே.கங்காதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வுச் செயலமர்வில், சுத்தமான குடி தண்ணீரின் முக்கியத்துவம், அந்த நீரை எவ்வாறு வீண்விர யம் இல்லாமல் பாவிப்பது, நீர்ப் பாவனையாளர்களின் வகிபாகம், சுத்தமான குடி தண்ணீர் எமது சுகாதார வாழ்க் கைக்கு எவ்வாறான உதவிகளை செய்கின்றது மற்றும் கழிவு நீரை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக பாடசாலை சுற்றுச்சூழல் மற்றும் எமது குடியிருப்பு பகுதிகளை எவ்வாறு பாதுகாப்பது போன்ற பல்வேறு விடயங்கள் காணொளி மூலம் மாணவர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

எதிர்காலத்தில் அதனை எவ்வாறு செயற்படுத்துவது போன்ற அறிவுரைகளையும் சாத்தியப்பாடுகளையும் பிராந் திய முகாமையாளர் அலுவலக சிரேஷ்ட சமூகவியலாளர் எம்.எஸ்.எம்.சரூக் வழங்கினார்.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட பொறியிலாளர் பீ.மயூரதன், பிரதேச பொறியியலாளர் ஐ.எல்.எம்.ஏ.ஜிப்ரி, திருக்கோயில் நிலையப் பொறுப்பதிகாரி ரீ.கமலகாந் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சுத்தமான குடி தண்ணீர் தொடர் பான விழிப்புணர்வு கையேடுகளும் வழங்கப்பட்டன.



# கல்முனை இளைஞர்களுடன் ஹரீஸ் சினேக பூர்வ சந்திப்பு!

(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம். எம் ஹரீஸ்'க்கும் கல்முனை தொகுதி இளைஞர்களுக்கும் இடையிலான சினேகபூர்வ சந்திப்பு நேற்று மாலை இடம்பெற்றது.

சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சந்திப்பில் ஆரம்பித்த முதலே எண்ணிலடங்காத இளைஞர்கள் ஒன்று திரண்டனர். இட நெருக்கடி ஏற்பட்டது. இதையடுத்து சட்டத்தரணி எச்.எம். எம் ஹரீஸின் அலுவலகத்தில் இருந்து கல்முனை ஆஸாத் பிளாசா மண்டபத்துக்கு நடை பவனியாக இளைஞர்கள் புடைசூழ முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அழைத்துவரப்பட்டு சந்திப்பு இடம்பெற்றது.

சமகால அரசியல் சூழ்நிலை குறித்து முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் இங்கு இளைஞர்களுக்கு விளக்கமளித்தார். இதன்போது கல்முனையின் இருப்பு , கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பில் இளைஞர்களுக்கு விளக்கமளித்தார்.

சந்திப்பின் இறுதியில் முன்னாள் எம்.பி. ஹரீஸின் வெற்றியை உறுதிப்படுத்தி மீண்டும் அவரை நாடாளு மன்றத்துக்குத் தெரிவு செய்வதற்கான அரசியல் களத்தில் ஈடுபடுவதென ஏகோபித்த தீர்மானத்தை இளைஞர்கள் எடுத்தனர்.

இந்தச் சந்திப்பில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கி யஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



# சுகாதார சீர்கேடாக இருந்த கழிவுகள் சமூக செயற்பாட்டாளரால் அகற்றல்!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பெரிய நீலாவணை தொடர்மாடிகளில் சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக பரிய சுகாதார சீர்கேடு இருந்து வந்தது. இந்தக் கழிவுகள் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சமூக சேவகர் சந்திரசேகரன் ராஜனின் முயற்சியால் அகற்றப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பெரியநீலாவணை 1 கிராமசேவகர் பிரிவில் பின்லாந்து அரசால் அமைக்கப்பட்டு 625 குடும்பங்கள் வசித்து வரும் இத்தொடர் மாடிகளில் கழிவுநீர் மற்றும் மலசலகூட கழிவு என்பன மல சலகூடக் குழிகளில் இருந்து வெளியேறி வீதிகளிலும் தொடர்மாடிக் கீழ் பகுதிகளில் தேங்கி த் துர்நாற்றம் வீசியது. சுகாதார சீர்கேடாக இருந்து வந்துள்ளது.

இது தொடர்பில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனிடம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க கல்முனை மாநகர சபையின் ஒத்துழைப்புடன் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் அவ்விடத்தில் நின்று அப்பிரதேசத்தை தூய்மைப் படுத்தும் வேலையை ஆரம்பித்துள்ளார்.

அதேவேளை கழிவகற்றும் வாகனங்களை வழங்கி இரவு, பகலாக ஒத்துழைப்பு வழங்கிய ஆணையாளர் என். எம்.நௌபீஸ், உதவி ஆணையாளர் எம்.எஸ்.எம்.அஸீம், மாநகர பொறியியலாளர் ஜவ்ஸி அப்துல் ஜப்பார், பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அர்சாத் காரியப்பர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் நசீம் சுகாதார பிரிவுக்குப் பொறுப்பான நௌசாட் அபூபக்கர் மற்றும் ஏனைய சிற்றூழியர்களுக்கும் முன்னாள் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன் நன்றி தெரிவித்துள்ளார்.



# கொழும்பு சாஹிரா கல்லூரி 13 வயது ரெனிஸில் சம்பியன்

(நூருல் ஹுதா உமர்)

கொழும்பு சாஹிரா கல்லூரியின் 13 வயதுக்கு உட்பட்ட ரெனிஸ் அணி பாடசாலைகளுக்கு இடையிலான இரண்டாம் பிரிவு ரெனிஸ் இறுதிப் போட்டியில் கொழும்பு ஆனந்தா கல்லூரி அணியை தோற்கடித்து பிளாட் கோப்பை பட்டத்தை வென்றது.

இலங்கை ரெனிஸ் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கு இடையிலான நடைபெற்ற டெரனிஸ் சுற்றுப் போட்டி கொழும்பு 7 ரெனிஸ் சங்க மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இதன்போது கொழும்பு சாஹிரா கல்லூரியின் 13 வயதுக்கு உட்பட்ட ரெ்னிஸ் அணி சார்பில் கலந்து கொண்டு விளையாடி தாலிப், அப்ரார், தாபிஷ், , யூசுப், அப்துல்ரஹ்மான், பிலால், ஆகிப் ஆகிய மாணவர்கள் இந்த சாம்பியனைத் தமதாக்கிக் கொண்டனர்.

அணி பொறுப்பு ஆசிரியர் எஸ். நளிமா, தலைமை பயிற்றுவிப்பாளர் கணேந்திரன், உதவி பயிற்றுவிப்பாளர்களான கவிலாஸ், அபிஷேக் போன்றோரின் முயற்சியின் பயனாக இந்த வெற்றி கிடைக்கப்பெற்றுள்ளது.

# திருமலை கோயிலின் புனிதத்தினை நிலைநாட்ட வேண்டியது முக்கியம்

## சந்திரபாபு நாயுடு தெரிவிப்பு



திருமலை கோயிலின் புனிதத்தை நிலைநிறுத்த வேண்டியது மிகவும் முக்கியம், இங்கு 'கோவிந்த நாமங்கள்' கோஷம் ஒலிக்க வேண்டும் என்று ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

திருப்பதி திருமலையில் உள்ள பத்மாவதி விருந்தினர் மாளிகையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அறநிலையத்துறை அமைச்சர் அனம் ராம்நாராயண ரெட்டி, திருமலை திருப்பதி தேவஸ்தான செயல் அதிகாரி ஜே. ஷியாமளா ராவ், கூடுதல் செயல் அலுவலர் வீரய்யா சவுத்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் சந்திரபாபு நாயுடு உரையாற்றுகையில், "மலைக்கோயிலின் புனிதத்தை நிலைநிறுத்த வேண்டியது மிகவும் அவசியம். கோயில் அமைந்துள்ள மலை உச்சியில் 'கோவிந்த நாமங்கள்' கோஷம் மட்டுமே ஒலிக்க வேண்டும். ஆன்மிகச் சூழலை எந்தவித சமரசமும் இன்றி பாதுகாக்க வேண்டும்.

பக்தர்களின் அதிகரித்து வரும் தேவைகளை பூர்த்தி செய்ய போதிய நீர் இருப்பை உறுதி செய்ய மேம்பட்ட திட்டமிடல் தேவை. திருமலை வனப்பகுதியில் தற்போது 72 வீத காடுகள் உள்ளன. பரந்த வனப் பாதுகாப்பு மற்றும் விரிவாக்க முயற்சிகளுடன் அடுத்த ஐந்தாண்டுகளில் குறைந்தது 80 வீதமாக உயர்த்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்புக்கான முயற்சிகள் குறித்த அறிக்கைகளை அதிகாரிகள் வழங்க வேண்டும்.

பக்தர்களுக்கான சேவைகளை மேம்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பக்தர்கள் தங்கள் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் கீழ் உள்ள அனைத்து கோயில்களிலும் படிப்படியாக இதுபோன்ற முறையை அதிகாரிகள் செயல்படுத்த வேண்டும்.

லட்டுகள் உள்ளிட்ட கோயில் பிரசாதங்களின் தரம் நிலையானதாகவும், மேம்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும். அவற்றைத் தயாரிக்க சிறந்த பொருள்களைப் பயன்படுத்த வேண்டும்.

திருமலையில் வளர்ந்து வரும் விஜபி கலாச்சாரம் தீவிர கவலைகளை அளிக்கிறது. ஆடம்பரம் இல்லாத, அதிக செலவு இல்லாத எளிமையான, ஆன்மிக அனுபவம் விஜபிக்களுக்கு கிடைக்கச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

அனைத்து பக்தர்களையும் மரியாதையுடன் நடத்த வேண்டும். எந்தவிதமான முரட்டுத்தனமான நடத்தையும் பக்தர்கள் மீது பிரயோகிக்கக் கூடாது. பக்தர்கள் திருப்தியுடனும் ஆன்மிக நிறைவுடனும் வீடு திரும்ப வேண்டும். திருமலா திருப்பதி தேவஸ்தான ஊழியர்கள் இதனை உறுதிப்படுத்த வேண்டும்." – என்றார்.

# சட்டப்பேரவை தேர்தல் பணிகளை உடன் தொடங்குங்கள்: தி.மு.க. ஒருங்கிணைப்பு குழுவுக்கு உதயநிதி அறிவுறுத்தல்



சட்டப்பேரவை தேர்தல் பணிகளை இப்போதே தொடங்குங்கள் என்று தி.மு.க. தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனை கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்காக தி.மு.கவில் 5 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவை கட்சியின் தலைவரும், தமிழக முதல் வருமான மு.க.ஸ்டாலின் அமைத்தார். அந்தக் குழுவில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், துணை முதல் வருமான உதயநிதி ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஒருங்கிணைப்புக் குழு இதுவரை கட்சியின் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, வழக்கறிஞர் அணி, தொழிலாளர் அணி, இலக்கிய அணி, சுற்றுச்சூழல் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக திமுக தலைமை அலுவலகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட 5 பேர் அடங்கிய தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் நேற்று ஆலோசனை நடத்தினர். இதில் மருத்துவர் அணி, மீனவர் அணி, சிறுபான்மையினர் நலப்பிரிவு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப் பட்ட அனைத்து பணிகள் குறித்தும் அப்போது ஒருங்கிணைப்புக் குழுவினர் கேட்டறிந்தனர்.

கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பேசும்போது, 2026 சட்டப்பேரவை தேர்தலுக்கு இப்போதிருந்தே பணிகளை தொடங்க வேண்டும். தி.மு.க. அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.குறிப்பாக, சிறுபான்மையினருக்காக மேற்கொள்ளப்படும் பணிகளை, அம்மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.






# லெபனானில் இருந்து வெளியேறிய 407 அவுஸ்திரேலியா பிரஜைகள்

தங்களது நாட்டுப் பிரஜைகள் 407 பேரை லெபனானில் இருந்து வெளியேற்றியுள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

வெளி விவகாரங்களுக்கான அவுஸ்திரேலிய திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்குள்ள அவுஸ்திரேலிய பிரஜைகளை வெளியேற்றுவதற்கு இரண்டு விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.









# அன்டனி பிளிங்கன் - கட்டார் பிரதமர் தொலைபேசியில் கலந்துரையாடல்

இஸ்ரேலுக்கும் ஹெஸ்புல்லாவுக்கும் இடையிலான மோதல் தொடர்பில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் அன்டனி பிளிங்கன், கட்டார் பிரதமர் ஷேக் மொஹமட் பின் அப்துல்ரஹ்மான் பின் ஜாசிமுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

நேற்றைய தினம் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் லெபனான் மற்றும் இஸ்ரேலில் உள்ள தங்களது வீடுகளுக்கு மீண்டும் திரும்புவதற்கு அனுமதிக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானத்தை செயற்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

1701 என்ற இந்த தீர்மானமானது ஹெஸ்புல்லாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான விரோதப் போக்கை முழுமையாக நிறுத்துவதற்கான யோசனைகள் அடங்கலாக



உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தின் விதிமுறைகளுக்கு இணங்கத் தவறியதாக ஹெஸ்புல்லாவும் இஸ்ரேலும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டுகின்றன.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 06/10/2024


## 3 நாள்களில் 3 கொலைகள்: பெண் சந்தேகநபர் கைது

கனடாவில், மூன்று நாள்களில் மூன்று கொலைகள் இடம்பெற்றுள்ளன. இந்த சம்பவம் தொடர்பில் 30 வயதான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்

02



## மத்திய கிழக்கில் அதிகரித்துள்ள போர்ப்பதற்றம்:

# கனேடியர்களை சிறப்பு விமானங்களில் விரைவில் நாடு திரும்புமாறு பிரதமர் ட்ரூடோ கோரிக்கை

**மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் லெபனானில் உள்ள கனடா குடியுரிமையா ளர்களை சிறப்பு விமானங் களில் விரைவில் பாதுகாப் பாக நாடு திரும்புமாறு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கேட்டுக்கொண்டுள்ளார். லெபனானில் ஏற்பட் டுள்ள போர் நிலைமை கார ணமாக ஏற்கனவே 1,000 இற்கும் மேற்பட்டோர் நாட்டை விட்டு வெளியேறி யுள்ளனர்.**

எனினும், லெபனானில் இன்னும் 6,000 பேர் காத்திருப்பதாகவும், வார இறுதியில் மேலும் 2,500 பேரை தொடர்பு கொள்ளும் முயற்சிகள் நடைபெறுவதாகவும் ட்ரூடோவின் அலுவலகம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே இன்றும், நாளையும் சிறப்பு விமானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என கூறப்படுகின்றது.

மேலும் கனடா விமானங்களில் பயண ஆசனங்கள் மீதமிருப்பதால், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, மற்றும் சில ஐரோப்பிய நாடுகளின் குடியுரிமையா ளர்களுக்கும் கனடா செல்ல வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இஸ்ரேல், லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புடன் மீண்டும் தீவிரமாக மோதல்களை நடத்தி வருகிறது. இதனால் பாதுகாப்பு சூழல் மோசமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஈ ஸ்கூட்டர், ஈ பைக்குகளுக்கு உரிமம் வழங்குமாறு கோரிக்கை

ஈ ஸ்கூட்டர்கள் மற்றும் ஈ பைக்குகளுக்கு உரிமம் வழங்கப்பட வேண்டும் என கனடியர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வீதிகளில் ஈ ஸ்கூட்டர்கள் மற்றும் ஈ பைக்குகளை பயன்படுத்துவதற்கு அனுமதி நடைமுறை ஒன்று அறிமுகம் செய்யப்பட வேண்டும் என கனடியமக் கள் தெரிவித்துள்ளனர்.

நானோஸ் ஆய்வு நிறுவனத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

கருத்துக் கணிப்பில் பங்கேற்ற சுமார் 57 வீதமானவர்கள் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

அனுமதி பத்திரம் அல்லது ஓர் உரிமம் இந்த ஈ ஸ்கூட்டர் மற்றும் ஈ பைக்குகளுக்கு வழங்கப்பட வேண்டும் என கனடியர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறு எனினும் இந்த கருத்துக்கணிப்பில் பங்கேற்ற 36 வீதமானவர்கள் சைக்கிள்களைப் போன்று ஈ ஸ்கூட்டர் மற்றும் ஈ பைக்குகளை பயன்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டுமென கருத்து வெளியிட்டுள்ளனர்.

கனடாவின் சில நகரங்களில் ஈ ஸ்கூட்டர் மற்றும் ஈ பைக்குகள் பயன்படுத்துவதில் சில வரையறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக அதிகபட்ச வேகம் பயன்படுத்துவோரின் வயதெல்லை போன்றன இவ்வாறு வரையறுக் கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ ஸ்கூட்டர்கள் மற்றும் ஈ பைக்குகள் பாதசாரி களுக்கும் விசேட தேவையுடையவர்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என சில தரப்பினர் சுட்டிக்காட்டி உள்ளனர்.





# தனது பிள்ளைகளை கடத்திய பெண் கைது





கனடாவில் தனது பிள்ளைகளை கடத்திய பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் கார்லிங்டன் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது 3 மகன்களையும் இந்தப் பெண் கடத்தியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி பெண் கடந்த 2023 ஆம் ஆண்டு தனது மூன்று மகன்களையும் கடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த வாரம் சஸ்கட்ச்வான் பகுதியில் வைத்து குறித்த பெண்ணை போலீசார் கைது செய்துள்ளனர்.

டர்ஹம் பிராந்திய பொலிஸார் அந்தப் பெண்ணை கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்ட்ரிட் மரியேன் ஷில்டர் என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவர்களை கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

காணாமல்போன சிறுவர்கள் நூறு நாட்களுக்குப் பின்னர் மீட்க மீட்கப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த கடத்தல் சம்பவத்திற்கு என்ன காரணம் என்பது குறித்து தகவல்கள் வெளியிடப்படவில்லை.

கடத்தல் மற்றும் நீதிமன்ற உத்தரவினை மீறியமை ஆகிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்தப் பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## 3 நாள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை முதல் வியாழக் கிழமை வரை, ரொறன்ரோ, நயாகரா நீர்வீழ்ச்சி மற்றும் ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள மற்றொரு நகரத்தில் இந்த கொலைகள் நடந்துள்ளன.

60 வயது பெண் ஒருவர் ரொறன்ரோவில் அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன், நயாகரா நீர்வீழ்ச்சியில், 47 வயதான லான்ஸ் கனிங்காம் என்பவரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹாமில்டனில் 77 வயதான ஆசிரியரான மாரியோ பிலிச் என்பவர் காத்திக் குத்து தாக்குதலுக்கு உள்ளான நிலையில், பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார். பின்னர் அவர் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார் .

இந்த மூன்று கொலைகள் தொடர்பில் மேற்படி பெண் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு, அவருக்கு எதிராக கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.



# கனடாவில் 13 வயது சிறுமி மீது தாக்குதல் நடத்திய சிறார்கள்










கனடாவில் மீண்டும் ஒரு சிறுமி மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், 30 பேர் தாக்குதலை வேடிக்கை பார்க்க, இரண்டு சிறுவர்கள் மட்டும் துணிச்சலாக தாக்குதலைத் தடுத்த சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திலுள்ள Kelowna நகரில், கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில், 13 வயது சிறுமி ஒருத்தி மீது ஐந்து பதின்ம வயதினர் தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இந்த சம்பவத்தை சுமார் 30 பேர் வேடிக்கை பார்த்துக் கொண்டி ருந்திருக்கிறார்கள். சிலர் அந்த காட்சிகளை வீடியோ எடுத்து சமூக ஊடகங்களில் பகிர்ந்தும் இருக்கிறார்கள்.

அதே நேரத்தில், இரண்டு சிறார்கள் துணிச்சலாக தாக்குதல் நடத்தியவர்களைத் தடுத்ததுடன், அவர்களில் ஒருவர் பொலிசாரையும் அழைத்துள்ளார்.

பொலிசார் தாக்குதல் நடத்திய ஐந்து பேரையும் கைது செய்து, அவர்கள் வயது வராதவர்கள் என்பதால், முதற்கட்ட விசாரணைக்குப்பின் அவர்களை விடுவித்துள்ளார்கள்.

அத்துடன், துணிச்சலாக தாக்குதலைத் தடுத்த இரண்டு சிறார்களையும் பொலிசார் பாராட்டியுள்ளதுடன், அவர்களுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், அந்த காணொலியை யாரும் பகிரவேண்டாம் என்றும் பொலிசார் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

சமீப காலமாகவே, கனடாவில் என்று மட்டுமில்லை, உலக நாடுகள் பலவற்றில் சிறார்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவது அதிகரித்துவருகிறது.

கனடாவைப் பொருத்தவரை, 2023ஆம் ஆண்டில் மட்டும் சிறார்கள் தாக்குதல் நடத்திய 41 சம்பவங்கள் பதிவாகியுள்ளமை கவலையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.